REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 1உ வியாழன் (17—11—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 2உ வெள்ளி (18—11—55) [இதழ் 133

சுல்தான் தாயகம் திரும்பினர்

ரபாட், நவ. 16—

மொராக்கோ சுல்தான் பென்யூசுப் இன்று பாரிசிலிருந்து விமானம் மூலம் இங்கு வந்து சேர்ந்தார். விமான நிலையத்தில், அவர்வருகைக்காகப் போராடிய மொராக்கோ மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி நின்று அவரை வரவேற்றிருக்கின்றனர். 1953-ம் ஆண்டுக்குப்பிறகு இப்போதுதான் அவர் தனது நாட்டு மக்களுடன் நேரடித் தொடர்புகொள்ள முடிந்திருக்கிறது.

சுல்தானை புதிய பிரதம மந்திரியும் விமான நிலையத்தில் வரவேற்றிருக்கிறார்.

மத மாற்றத்தைக் கட்டுப்படுத்த மசோதா!

கிறித்துவர்கள் கலக்கம்!

அரசியல் சட்ட உரிமைகள் பறி போகும் என்று அச்சம்

இந்திய சர்க்கார் நிலை என்ன?

கோட்டயம், நவ. 15—

மத மாற்றங்களைப் பதிவு செய்யவும், ஒழுங்குபடுத்தவும் என்று கூறி, அண்மையில் மக்கள் சபையில் கொண்டுவரப்படுகிற மசோதா குறித்து இங்குள்ள கிறித்துவ மக்கள் சபை, சட்ட சபை உறுப்பினர்கள், கூட்டம் ஒன்றில் ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கின்றனர்.

இந்த மசோதாவை சட்டமாக்கவிடாது செய்ய குடியரசுத் தலைவர், பிரதமர், உள்நாட்டு மந்திரி, மக்கள் சபை உறுப்பினர்கள், காங்கிரஸ் செயற்குழுவினர் ஆகியோரெல்லாம் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்று அந்த கிறித்துவ உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

பதிவு செய்யவும் அனுமதி வழங்கவுமாக ஒரு நிறுவனம் அமைப்பதின் மூலம், மத மாற்றங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று மசோதா கூறுகிறதாம்.

மத மாற்றங்கள் பற்றி சரியான புள்ளிவிபரங்கள் தர இதுவரை ஒரு நிறுவனம் இல்லை என்பதால் இந்த மசோதா மூலம் அதை நிறுவவேண்டும் என்று கூறப்படுகிறதாம்.

நடைபெற்ற கிறித்துவ உறுப்பினர்கள் கூட்டத்தில், திரு-கொச்சி போலீஸ் இலாகா மந்திரி ஏ. ஜே. ஜானும் கலந்துகொண்டிருக்கிறார் என்று தெரிய வருகிறது.

[இந்திய அரசியல் சட்டப்படி குடிமக்கள் அனைவரும் தாங்கள் விரும்பும் மதத்தில் நம்பிக்கை கொள்ளவும், வழிபடவும் உரிமை படைத்தவர்களாயிருக்கின்றனர்.

மத மாற்றத்தை ஒழுங்குபடுத்துவது கட்டுப்படுத்துவது என்பது, அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளைப் பறிப்பதாக அமையக் கூடியதல்லவா என்ற கேள்வியும் இந்த மசோதாமீது எழுகின்றது.]

பக்தூனிஸ்தான் விடுதலை: அமெரிக்கா ஆதரவு!

ஆப்கன் பெரியோர் சபையில் தகவல்

பெஷாவர், நவ. 16—

ஆப்கனிஸ்தான் தேசிய சட்டசபை (முதியோர் சபை — ஜிர்கா) இன்று துவங்கியிருக்கிறது.

மன்னர் ஜாகீர் ஷா இந்த சபைக் கூட்டத்தைத் துவங்கி வைத்ததாகக் காபூல் வானொலி அறிவித்திருக்கிறது.

அவசர காலங்களில் மட்டுமே கூட்டப்படும் இந்த ஜிர்கா, மேற்கு பாகிஸ்தான் இணைப்பு குறித்து ஆப்கன் கொள்கையை உறுதி செய்வதற்காகவே கூட்டப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

'ஆப்கானியரும் பக்தூன்களும் சகோதரர்கள்; ஒரே மொழி, கலாச்சாரம், இனத்தைச் சேர்ந்தவர்கள்; பக்தூன் இயக்கத்தில் ஆப்கன் சிரத்தை காட்டுவதற்கு இதுவே காரணம்' என்று, சபையில் பேசிய பிரதமர் சர்தார் தாவூத்கான் குறிப்பிட்டிருக்கிறார்.

பர்மா, பாகிஸ்தான் போல பக்தூனிஸ்தானும் ஒரு தனி நாடாகும் என்றும், அந்தப் பகுதி தனது சுதந்திரத்திற்காகப் பிரிட்டிஷ் ஆட்சியின்போதும் பின்னரும் போராட்டம் நடத்தி வருகிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"பிரிட்டிஷ் இந்திய சர்க்காரிடமும், இந்தியாவை ஆளப் போகும் கட்சியினரிடமும், பக்தூன் பிரதேசம் இந்தியாவைச் சேர்ந்ததல்ல என்றும், அப்பகுதிக்கு சுதந்திரம் தர வேண்டும் என்றும் அந்தக் காலத்திலேயே தெரிவித்திருக்கிறோம். பிரிட்டிஷார் அதனைக் கேட்காமல் அப்பகுதியை பாகிஸ்தானுடன்

(4-ம் பக்கம் பார்க்க.)

இந்தியாவெங்கணும் ஆர்ப்பாட்டங்கள்:

பம்பாய் சட்ட சபை முன் ஆர்ப்பாட்டம்

சம்யுக்த மராட்டியம் கோரி நடவடிக்கை

பம்பாய், நவ. 15—

நவ. 18-ந் தேதியன்று பம்பாய் சட்ட சபை கூடும்போது, சம்யுக்த மராட்டியக் கோரிக்கையை ஆதரித்து சட்டசபைமுன்பாகபெருத்த ஆர்ப்பாட்டம் செய்வது என்று சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு தலைவர்கள் முடிவெடுத்திருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டங்கள் கூடாது என்ற தடையை மீறுவதை அனுமதிக்க முடியாது என்று சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கிறதாம்.

★

கர்நாடக மாநில அமைப்பு

கன்னடியரிடையே மோதுதல் — போலீசார் தடியடி!

பெங்களூர், நவ. 16—

மாநிலக் குழுவின் அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக, மைசூர் சட்டசபை இன்று கூடியபோது 'மைசூர் மைசூர் வாசிகளுக்கே' என்று கோஷமிட்டுக் கொண்டு ஒரு சாராரும், 'மைசூர் அடங்கிய கர்நாடகம் வேண்டும்' என்று குரல் எழுப்பிய வண்ணம் மற்றொரு சாராரும் சட்டசபைக் கட்டிடத்தின் முன்கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

சட்டசபைக்கு இரண்டு பர்லாங்கு தூரத்தில் இந்தஇருசாரருக்குமிடையே மோதல்ஏற்பட்டபோது, நிலைகட்டுமீறிப் போகாது தடுப்பதற்காக, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும் சுமார் 10 பேருக்கு மேல் காயம்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கர்நாடக மாநிலம் அமைக்கக் கோரும் ஆதரவாளர்கள் சுமார் 2,000 பேர் இன்று காலை சுபாஷ் நகரில் கூட்டம் போட்டிருக்கின்றனர். அங்கிருந்து ஊர்வலமாகக் கிளம்பி குரல் எழுப்பிய வண்ணம் சர்க்கார் அலுவலகத்தை நோக்கிச் சென்றிருக்கின்றனர்.

மைசூர் தனியாக இருக்க வேண்டும் என்று கோரும் மற்றொரு ஊர்வலமும் வந்தது.

இருதரப்பாருமாகச் சேர்ந்து சுமார் 5,000 பேர் இருந்தனர் என்று மதிப்பிடப்படுகிறது.

எஞ்சினீயரிங் கல்லூரி அருகே இரண்டு ஊர்வலங்களும் நெருங்கியபோது மோதல் ஏற்பட்டதாம்.

★

51 'கர்நாடக பரிஷத்' தொண்டர்கள் கைது!

பெல்லாரி சிக்கல் போராட்டமாக உருக்கொள்கிறது

பெல்லாரி, நவ. 16—

'அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத்'தைச் சேர்ந்த 51 தொண்டர்கள் இன்று கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

'ஆந்திராவுடன் இணைக்கப்பட வேண்டும்' என்று மாநிலக் குழு சிபாரிசு செய்துள்ள பெல்லாரி, ஓஸ்பெட், சிறுகுப்பா வட்டங்கள் கர்நாடகத்துடனேயே இருக்கும் என்று இந்தியப் பேரரசு நவம்பர் 15-ந் தேதிக்குள் வாக்குறுதி தராவிட்டால், 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபடப் போவதாக பரிஷத் ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்தியப் பேரரசின் வாக்குறுதி கிடைக்காததினால் இன்று தொண்டர்கள் துங்கபத்திரா அணைக்கட்டுப் பகுதிக்குச் சென்று 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபட முனைந்தனர்.

இவர்கள் கால்வாய் நீர் விதிகளை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்டு இரு பிரிவினராகக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

அருகாமையில் உள்ள கிராமங்களிலிருந்து வந்து குழுமியிருந்த சுமார் 2,000 விவசாயிகள், இந்த 'சத்தியாக்கிரக'த்தை ஆதரித்து கோஷங்கள் எழுப்பினராம்.

ஐக்கிய கர்நாடக அமைப்பு

அனுமந்தையா வேண்டுகோள்

பெங்களூர், நவ. 16—

"ஐக்கிய கர்நாடக அமைப்பினால் மைசூர் இப்போது அனுபவித்து வரும் எந்த சலுகையும் பாதிக்கப்படாது; மாறாக, இன்னும் உறுதியான சர்க்கார் அமையவும், நிர்வாகத் திறன் அதிகரிக்கவும், பொருளாதார நிலை சீர்படவும் அது உதவுவதாக இருக்கும்;

"எனவே மைசூர் மக்கள், இரண்டாண்டுகளுக்கு முன்னால் பெல்லாரி மக்கள் தங்களுடன் இணைந்தபோது காட்டிய பெருந்தன்மையை, இப்போதும் 98-லட்சம் கன்னடியர் தங்களுடன் ஒன்றாக இணைய ஒரு மனதுடன் முன் வரும்போதும் நேசத்துடன் வரவேற்கும் பெருந்தன்மை காட்டவேண்டும்,"

என்று, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா, சட்டசபையில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் மேலிட முடிவு

மைசூர், நவ. 16—

ஐக்கிய கர்நாடகம்தான் அமைய வேண்டும் என்று காங்கிரஸ் பெருந் தலைவர்கள் கருதுவதாக, அவர்களைச் சந்தித்தபோது அறிந்துகொண்டதாக மைசூர் பிரதேச காங்கிரஸ் தலைவரான எஸ். சென்னையா தெரிவித்திருக்கிறார்.

காங்கிரஸ் பெருந்தலைவர்களின் முடிவு இறுதியானது என்றும், முதன் மந்திரி அனுமந்தையா துவக்க முதலே இது குறித்து உறுதியாகக் கருத்தறிவித்திருந்தால் இப்பொழுது மைசூரில் எழுந்துள்ள குழப்பம் தவிர்க்கப்பட்டிருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்திய இராணுவ அதிகாரியும் துணைவியும் சுட்டுக் கொலை!

புதுடில்லி, நவ. 16—

இந்தியப் பேரரசின் தற்காப்பிலாக்கா பாதுகாப்புப் படைத் தலைமை அதிகாரியான கர்னல் எம். எஸ். தில்லானும் அவரது துணைவியாரும் நிஜாமுதீன் ரயில் நிலையம் பண்ணையில் இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் நினைவாக, தற்காப்பிலாகா அலுவலகம் இன்று பிற்பகல் 1-30 மணிக்கு மூடப்பட்டது.

தற்காப்பிலாகா மந்திரி டாக்டர் கட்ஜூ, அதிகாரியின் தாயாருக்கு அனுதாபச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

மாநில மாநாட்டு நிதி

★

செலுத்த வேண்டிய பங்குத் தொகையில் செலுத்தாமல் பாக்கியாக வைத்திருக்கும் தொகைகளை உடனடியாகத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும்படி மாவட்டக் கிளைகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

இதுவரையில் நிதி திரட்டித் தராத சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைகள் தம்மால் ஆன அளவு நிதி திரட்டி அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

கழகத் தோழர்களும், கழகத்திடத்தே பற்றுக் கொண்டுள்ளவர்களும் தனிப்பட்ட முறையில் தம்மால் இயன்ற அளவு நிதி திரட்டி அனுப்பும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
17-11-55.

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—11—'55 வியாழன்

பழைய பல்லவி!

இந்தித் திணிப்புக் குறித்து, வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகள் திரும்பத் திரும்ப தாங்கள் கூறியதையே கூறிவருகின்றனர். பல்லவி பழையதுதான்; பாடுபவரும், பக்கமேளம் வாசிப்பவர்களும்தான் வேறு வேறு நபர்களாயிருக்கின்றனர்.

"இந்தியைத் திணிக்கும் நோக்கமே இல்லை. வட்டார மொழிகளின் இடத்தைப் பறிக்கும் எண்ணமே கிடையாது;

"இந்தி அகில இந்தியக் காரியங்களுக்காக மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இதனுல் இதர மொழிகளின் 'தேசியத் தன்மை' குன்றிவிடவில்லை; பெருமை குறைந்துவிடவில்லை - மறைந்து விடவில்லை;

"அகில இந்திய காரியங்களுக்காக இந்தி தேர்ந்தெடுக்கப்பட்டதின் காரணம், அது எல்லா வகையாலும் வசதியாயிருப்பதுதான்; சந்தர்ப்பவசமாக இந்தியாவில் பெரும்பாலான மக்கள் இந்தி பேசுபவர்களாயிருக்கின்றனர்; பிற மொழி பேசுபவர்களைவிட இந்தி பேசுவோர் எண்ணிக்கை அதிகம்; அதனுல்தான் இந்தி, அகில இந்திய மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது,"

என்றெல்லாம், இப்போது தமிழ்நாடு வந்திருக்கும் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரர் வழக்கம் போலப் பழைய பல்லவியைப் பாடியிருக்கிருர். டாக்டர் இராசேந்திரரும் பண்டித நேருவும் இதுபோன்று வழங்கும் உறுதி மொழிகள் தமிழக மக்களுக்கு — திராவிடர்களுக்கு கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய்விட்டவையாகும்.

உறுதி மொழி தருவோர், இந்தி திணிக்கப்படவில்லை என்று கூறும் முன், இந்தி பற்றி அவர்கள் மேற்கொண்டு வரும் நடைமுறைக் கொள்கை குறித்தும் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

டாக்டர் இராசேந்திரர் சென்னை 'இராஜ பவன'த்தில் பூ மத்தாப்பும், சீன வெடியும் கொளுத்தித் 'தீபாவளி' கொண்டாடிக் கொண்டிருந்த தினத்தன்று, 'ராஷ்டிரபதி பவன'ம் இருக்கும் டெல்லியிலிருந்து சில செய்திகள் வெளிவந்திருக்கின்றன, கடந்த கிழமையில்.

இனி இரயில் நிலையங்களில் இந்திச் சொற்கள்தான் முழுவதுமாக உபயோகப்படுத்தப்படும் என்பது ஒன்று. அது குறித்து நாம் அன்றே எழுதியிருந்தோம்.

மற்றொரு செய்தி — இரயில்வே இலாகாவில் வேலை தேடுவோர் வேலைக்காகப் பயிற்சிபெறும்போது இந்தியில் ஒரு பரீட்சை எழுதி தேற வேண்டும் என்று இரயில்வே 'போர்டு' உத்தரவிட்டிருக்கிறது என்று!

மற்றொரு செய்தி, 'ரஷ்யத் தலைவர்கள் வரவேற்கப்படும் போது, இந்தியில்தான் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட வேண்டும்; தமிழ் போன்ற வட்டார மொழிகளில் கூடாது' என்பதாகும்.

நடைமுறையில் இந்தியப் பேரரசினர் இந்தியை தங்களிடம் சிக்கியுள்ள அதிகார பலத்தால் முடிந்த துறைகளில் எல்லாம் திணித்து வருகின்றனர் என்பதற்கு இந்தச் செய்திகள் உண்மையானவை என்ருல், மறுக்க முடியாத ஆதாரங்களாக அமைகின்றன.

தமிழ் வழங்கும் பகுதியில் உள்ள இரயில் நிலையங்களில் இந்தி உபயோகிக்கப்படுகிறது, கட்டாயமாக என்ருல், அது இந்தி திணிப்பு என்று பொருள்படாமல் வேறெந்தப் பொருளுடையதாகுமோ?

'சகாயக் ஸ்டேஷன் மாஸ்டர்' என்ற சொல் இரயில் நிலைய அதிகாரியைக் குறிக்கும் என்ருல், அதனைப் புரிந்து கொள்ள விரும்புவோர் இந்தி தெரிந்தவர்களாயிருக்க வேண்டும் அல்லவா?

இரயில்வேயில் வேலை வேண்டுமென்று கோரும் இதர வட்டார மொழி பேசுவோர் இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டளை எப்படி இந்தி திணிக்கப்படவில்லை என்பதைக் கூறுவதாயிருக்க முடியும்?

நடைமுறையில் இந்தியை மறைமுகமாகக்கூட அல்ல, நேரடியாகவே கட்டாயமாக்கி வரும் இந்தியப் பேரரசினர், எப்படித்தான் துணிந்து இந்தி திணிக்கப்படவில்லை என்று கூறுகின்றனரோ?

சில நாள் முன் முன்ஷி என்ற உத்தர பிரதேச கவர்னர் இந்தியை இந்தியாவில் உள்ள கல்விக் கூடங்களில் போதனு மொழியாக ஆக்கவேண்டும் என்று பேசினர்.

ஆனுல், டாக்டர் இராசேந்திரர், வட்டார மொழிகளைப் பெற்றுள்ள இடத்தைப் பறிக்க வேண்டும் என்ற எண்ணம் வடநாட்டில் எவருக்கும் இல்லை என்று கூறுகிருர். இது உண்மைதானு?

மேலும் அவர், 'இந்திக்கு வட்டார மொழிகளின் இடத்தைப் பெற்றுத்தர எந்த முட்டாள்களேனும் ஈடுபட்டால் அது முடியாத காரியம் என்பதை உணர்வர். நாங்கள் ஒன்றும் அவ்வளவு முட்டாள்கள் அல்ல' என்றும் கூறியிருக்கிருர்.

அந்த அந்த வட்டாரங்களில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில், அந்த அந்த வட்டார மொழிகள் இடம் பெற முடியும்—வேண்டும்; இரயில் நிலையங்களிலும் அதே போலத்தான்; ஆனுல் நிலைமை என்ன? அஞ்சல் அட்டை, முத்திரை, பணம் அனுப்பும் நமூனு, இரயில் நிலையப் பெயர்கள், அங்கு வழங்கும் சொற்கள் இவை எல்லாம், இந்தி வட்டார மொழி பெறவேண்டிய இடத்தை இந்தி பெற்றிருக்கிறதே!

இதை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாது 'நாங்கள் ஒன்றும் இந்தியைத் திணிக்கவில்லை; நாங்கள் அவ்வளவு முட்டாள்கள் அல்ல' என்று பேசிவிடுவதினுலேயே திராவிடர்கள் மயங்கிவிடமாட்டார்கள். ஏனெனில், வடவரின் ஏகாதிபத்திய எண்ணத்தைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள்களல்ல, திராவிடர்கள் அத்தனைபேரும்.

பழைய பல்லவிகள், பயன் ஏதும் தராது என்பதை பாடுவோர் சீக்கிரம் உணருவர்.

வடநாட்டுக் கலாச்சாரப் பெருமை!

டாக்டர் இராசேந்திரர் விளக்கம்

புதுவை, நவ. 15—

"இந்தியாவுக்கே உரித்தான தனிச் சிறப்புக்கள் உண்டு; யுகங்களாக அவை பேணப்பட்டு வந்திருக்கின்றன;

"இந்தியாவில் இலட்சக்கணக்கான மக்களால் பின்பற்றப்படாத மதம் எதுவும் உலகில் இல்லை!

"நமது கலாச்சாரம், கலப்புக் கலாச்சாரம்; நம் நாட்டுடன் தொடர்பு கொண்டவர்கள் அனைவரிடமிருந்தும் வாங்கி வளம் (!) பெற்ற கலாச்சாரம்! அன்னிய நாட்டினர் வருகையை நாம் ஒரு போதும் தடுத்ததில்லை; நம்மவர்கள் வலுச் சண்டைக்குப் போனதாக சரித்திரமே கிடையாது; மற்றவர்களின் ஆக்கிரமிப்பால் நாம் அவ்வப்போது கஷ்ட நஷ்டங்கள் அடைந்ததுண்டு; ஆனுல், ஒருபோதும் வேற்று நாட்டின் மீது படையெடுத்தது கிடையாது; எனவே, நமது பிரதம மந்திரி, இன்று, தீவிரமாக எந்தக் கொள்கைக்குப் போராடிவருகிருரோ அந்த சமாதானக் கொள்கை நமக்குப் புதியதல்ல; அது நமது சரித்திரத்தையும் பரம்பரையையும் அனுசரித்ததே,"

என்று, குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் புதுவை மக்களிடத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

"இந்த முன்னைய பிரெஞ்சுப் பகுதிகளில் 200 ஆண்டுக் காலமாக வாழ்ந்துவரும் உங்களுக்கு எவ்வித சந்தேகமும் இருக்கத் தேவை இல்லை. நீங்கள் பெருமைகொள்ளும் பிரெஞ்சுக் கலாச்சாரமும், பாரம்பரியமும் பேணிக் காக்கப்படும்.

"பொறுமையின் மூலம் நாம் இப்பகுதிகளை வெற்றிகொண்டோம்; இன்னும் எஞ்சியுள்ள இதர நடைமுறைகளும் அதே வகையில் பூர்த்தி செய்யப்படும்.

"சட்டரீதியான அதிகார மாற்றம் உட்பட உங்களின் முன்புள்ள எல்லா சிக்கல்களும் கூடிய சீக்கிரத்தில் தீர்க்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்," என்றும் இராசேந்திரர் கூறினுராம்.

★

வேவு பார்க்க இளம் பெண்கள்

பாகிஸ்தானில் நுழைந்திருப்பதாக செய்தி?

கராச்சி, நவ. 14—

பாகிஸ்தானில், வெளிநாடு ஒன்றின் உளவாளர்கள் தங்களது இரகசிய வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகக் கராச்சி பத்திரிகைகள் பலவும் செய்தி வெளியிட்டிருக்கின்றனவாம்.

70 அல்லது 80 அழகான பெண்கள் மேற்கு பாகிஸ்தானில் எப்படியோ புகுந்துவிட்டிருப்பதாயும், அவர்கள் பாகிஸ்தான் பொது வாழ்வின் பல துறைகளிலும் ஈடுபட்டிருக்கும் முக்கியமானவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாயும், அந்தப்பெண்கள் நாகரீகமானவர்களாயில்லாவிடினும், மிகவும் அந்தரங்கமான நண்பர்களாகிவிடுவதாயும், இவர்கள் எல்லாம் அந்த வெளிநாட்டிற்காக உளவு பார்க்கும் வேலையிலீடுபட்டிருப்பதாயும் அந்த செய்திகளில் கூறப்படுகிறதாம்.

அந்தச் செய்திகளைத் தந்த நிறுவனம் இந்த வேவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டுள்ள வெளிநாடு எது என்பதைத் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஆக்க வேலைக்கு அணுசக்தி!

ரஷ்யா - ஜப்பான் ஒப்பந்தம்

வாஷிங்டன், நவ. 15—

அணுசக்தியை ஆக்க வேலைக்கு உபயோகிப்பதில் ஒத்துழைப்பது சம்பந்தமாக இன்று ஜப்பானும் - ரஷ்யாவும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனவாம்.

'கிராமங்களில் கல்வி நிலையங்கள் வளர வேண்டும்'

இராசேந்திரர் கருத்து

காரைக்குடி, நவ. 15—

படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்கு கிராமங்களில் கல்வி நிலையங்கள் இருப்பது பெரிதும் உதவியாகவிருக்கும், என்றும் புராதன இந்தியாவில் கிராமாந்திரப் பகுதிகளில்தான் கல்வி நிலையங்கள் இருந்தனவென்றும் டாக்டர் இராசேந்திரர் குறிப்பிட்டிருக்கிருர்.

எட்டு ஆண்டுகளில கல்வித் துறையில் ; காரைக்குடியில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியைப் பார்க்கும்போது இங்கு தனியாக ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட்டுவிடலாமென நினைக்கத் தோன்றுவதாயும் குடியரசுத் தலைவர் கூறினுராம்.

காரைக்குடியில் கல்வி நிலையங்கள் ஒன்றன்பின் ஒன்ருய் வளருவதற்கு காரணகர்த்தாவாயிருக்கும் டாக்டர் அழகப்ப (செட்டியாரை)யும் தலைவர் வெகுவாகப் பாராட்டியிருக்கிருர்.

ரஷ்யாவிலிருந்து திரும்பிய பர்மியப் பிரதமர்

டில்லியில் நேருவுடன் பேச்சு

புதுடில்லி, நவ. 15—

பர்மியப் பிரதமரான யூ-நு இரண்டு கிழமைகளுக்குமதிகமாக ரஷ்யாவில் சுற்றுப் பிரயாணம் செய்து, மகத்தான வரவேற்புகளையும் பல்லாயிரக் கணக்கான ரஷ்யர்களின் வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டு இன்று தாயகம் திரும்பும் வழியில் டெல்லி வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் பிரதமர் நேருவும், திருமதி இந்திரா காந்தியும் அவரை வரவேற்றிருக்கின்றனர்.

அவர் டில்லியில் தங்கியிருக்கும்போது ரஷ்யா பற்றிய தனது கருத்துக்களை, அண்மையில் ரஷ்யா சென்று திரும்பிய நேருவுடன் பரிமாறிக் கொள்வார் என்று தெரியவருகிறது.

மேலும் இன்று மாலை அவரும் நேருவும் இந்திய தொழிற் கண்காட்சிசாலைக்குச் சென்று சுற்றிப் பார்த்திருக்கின்றனர். நாளைய தினம் அவர், தான் ரஷ்யாவிலிருந்து வந்த ரஷ்ய விமானத்திலேயே ரங்கூன் போய் சேருவார் என்று தெரியவருகிறது.

இரயில்வேக்கள் மாநில சர்க்காரால் நிர்வகிக்கப்பட வேண்டும்

பாக். அரசியல் நிர்ணய சபையில் கோரிக்கை

கராச்சி, நவ. 14—

"செய்திப் போக்குவரத்து, இரயில்வே இலாகாக்கள், மாகாண சர்க்காரால் நிர்வகிக்கப்படவேண்டும்" என்று பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் உள்ள வங்காள அங்கத்தினர்கள் கோரிவருகின்றனர் என்று தெரியவருகிறது.

அரசியல் சட்ட உபகுழு, கடந்த மூன்று நாட்களாக இதுகுறித்து விவாதித்தும் இன்னும் முடிவேதும் காணுத நிலையிலேயே இருப்பதாகத் தெரிகிறது.

கிழக்கு வங்க இரயில்வே, கிழக்கு வங்க மாநில சர்க்காராலும், வடமேற்கு இரயில்வே மேற்கு பாகிஸ்தான் மாநில சர்க்காராலும் நிர்வகிக்கப்படவேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தி வருகின்றனராம்.

பாகிஸ்தான் பிரதம மந்திரி சௌத்ரி முகமது அலி இந்தக் கோரிக்கையை எதிர்க்கிருராம்.

மேற்கு பாகிஸ்தான் மாநில கவர்னரான குர்மானியும், நிதி மந்திரியான தௌலத்தானுவும், இந்தக் கோரிக்கையை ஆதரிக்கின்றனராம்.

பிரதமர் சௌத்ரி முகம்மது அலி, இரயில்வே இலாகா மத்திய சர்க்காரின் நிர்வாகத்திலேயே இருக்கவேண்டுமென்று கோருகிருராம்.

பட்டம் தாணுவின் 'கலாட்டா'

கோவிந்தமேனன் டெல்லிக்குப் பறக்கிருர்

வரும் நவம்பர் 21-ந் தேதியன்று திரு—கொச்சி சட்டசபை மாநிலக் குழு அறிக்கை குறித்து விவாதிப்பதற்காகக் கூடும்போது, சட்டசபை கட்டிடத்தின் முன் ம. சோ. கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்துவார்களாம்.

தென்திருவாங்கூரில் உள்ள ஐந்து தமிழ் தாலுகாக்களை சென்னையுடன் இணைப்பதை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றனவாம்.

தென்திருவாங்கூர் தமிழ் வட்டங்கள் மட்டுமின்றி மலபார், கூடலூர் உள்ளடங்கிய கேரள மாநிலம் அமைப்பதற்காக கேரள மக்கள் எத்தகு தியாகமும் செய்வதற்குத் தயாராயிருக்க வேண்டும் என பட்டம் தாணுப் பிள்ளை அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிருராம்.

இதற்கிடையில் முதன் மந்திரி கோவிந்த மேனனும், நிதி மந்திரி ஜ னும், டெல்லியின் அழைப்பின்பால் அவசரமாகப் புறப்பட்டு டெல்லி பயணமாயிருக்கின்றனர்.

3,800 வார்த்தைகளடங்கிய அறிக்கை ஒன்றையும் அவர்கள் தூக்கிச் சென்றுள்ளனராம்.

அவர்கள் நேரு உள்ளிட்ட காங்கிரஸ் உயர் அதிகாரக் குழுவினரிடம் கேரள மாநில அமைப்புக் குறித்து தங்கள் கோரிக்கைகளை எடுத்துச் சொல்லுவராம்.

செய்திச் சுருள்

★

வட சென்னை தாளமுத்து — நடராசன் முன்னேற்ற மன்றம்

13—11—55 இரவு 6½ மணி அளவில், சென்னை—இராயபுரம் மீனாட்சியம்மன் பேட்டையிலுள்ள வடசென்னை தாளமுத்து - நடராசன் முன்னேற்ற மன்ற இல்லத்தில், தோழர் இ. அன்பானந்தன் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எ. ஜே. இராபர்ட், மா. கனிச் சொல்லன், ச. பாலன், சோ தைரியம், சாமிநாதன் ஆகியோர் பல பொருட்கள் குறித்துப் பேசினர்.

இறுதியில், பேராசிரியர் இருதயராஜ் எம். ஏ., அவர்கள் திடீர் மரணமுற்றமை குறித்து, அன்னார் உற்றார் உறவினர் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், திரு-கொச்சி முன்னாள் அட்வொகேட்-ஜெனரல் குட்டிகிருஷ்ணமேனன்; முன்னாள் மாவட்ட மாஜிஸ்திரேட் பி. எ. கிருஷ்ணன்குட்டி நாயர் ஆகியோர் உள்ளிட்ட 10 பேர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், திரு-தமிழ்ப் பகுதி வாழ் தமிழர்கள் பிழைக்கவந்த கூலிகள் என்று இழிவுபடக் குறிப்பிட்டிருப்பதை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை லயோலா கல்லூரித் தமிழ்ப்பேரவை

10—11—55 மாலை மேற்படி கல்லூரித் தமிழ்ப் பேரவையின் சார்பில், கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திரு மா. வளவன் பாண்டியனார் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், தலைவர், இலக்கிய, அரசியல் உலகில் தோழர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிவரும் தொண்டு குறித்துப் பாராட்டிப் பேசினார். கல்லூரிப் பேரவைச் செயலாளர் தோழர் சே. செ. அசீஸ், அன்பழகன் அவர்களது நற்பணிகளை சிறப்பித்துக் கூறினார். பின்னர் தோழர் க. அன்பழகன் அவர்கள், சங்க காலந்தொட்டே நாகரிகத்துடனும், சிறப்புடனும் பெருவாழ்வு வாழ்ந்த தமிழ் இனம், இடைக்காலத்தில் நமது பண்பாட்டுக்கு ஒவ்வாத கொள்கைகள் குடிபுகுந்ததால் தாழ்வுற்றமையினை விளக்கியும், தாழ்வு போக்கி வாழ்வு காண ஆற்றவேண்டிய கடமைகளை விளக்கியும் பேசினார். மேலும், குறள் நெறியைப் பரப்ப வேண்டுவதின் இன்றியமையாமையையும், கண்ணனையும், அவர் போன்ற சமயத் தலைவர்களையும் அறிந்த மக்கள், திருவள்ளுவரை அறியாமல் போனமை குறித்தும், குறள் நெறி பரப்ப மாணவர் அனைவரும் ஒன்று திரள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

சென்னை, நவ. 15—

தீபாவளியன்று இஷ்டப்படி செலவு செய்ய பெற்றோர் பணம் தராததினால் அருள்தாஸ் என்ற 18 வயதான இளைஞர் நேற்று கூவம் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

பக்ரா - நங்கலின் மற்றொரு திட்டம்!

★

மிகப் பெரும் திட்டங்களுள் ஒன்றான பக்ரா-நங்கல் அணைத் திட்டம் 1946-ல் ஆரம்பிக்கப்பட்டதாயினும், இந்தியா சுதந்திரம் பெற்ற பின்தான் அது சம்மந்தமான வேலை தீவிரமடைந்தது. 1954 ஜூலை 8-ந் தேதி பிரதமர் பண்டித நேரு, பக்ரா கால்வாய்களைத் திறந்துவைத்துப் பேசுகையில், 'பிரம்மாண்ட சாதனை' என்றும், 'நாட்டின் சக்தியையும் முயற்சியையும் எடுத்துக் காட்டுகிற சின்னம்' என்றும் வர்ணித்தத்தார். இந்தத் திட்டத்தின் ஒரு உறுப்பான கங்குவால் மின்சார நிலையத்தின் ஆரம்ப விழாவை இவ்வாண்டு ஜனவரித் திங்கள் 2-ந் தேதியன்று குடியரசுத் தலைவர் ராசேந்திரர் நடத்திவைத்தார்.

இத்திங்கள் 17-ந் தேதி இந்த அணைத் திட்டத்தின் மற்றொரு கட்டம் ஆரம்பமாகிறது. 680 அடி உயரமுள்ள அந்த அணையைக் கட்டுவதற்கு முதன் முதலாகக் காங்கிரீட் இப்பொழுது கொட்டப்படுகிறது.

பக்ரா-நங்கல் அணைத் திட்டத்தில் ஐந்து முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன. பக்ரா அணை; நங்கல் அணை; நங்கல் ஹைடெல் கால்வாய்; பக்ரா கால்வாய் ஏற்பாடுகள்; மின்சார நிலையங்கள்.

பக்ரா அணை தேக்க மட்டம் வரையில் 680 அடி உயரமுள்ளது; பாதை மட்டம் வரையில் அதன் நீளம் 1,700 அடி; உயர்ந்த அளவு அகலம் 625 அடி; அணையின் மத்தியில் தண்ணீர் வழிந்தோடுவதற்காக 260 அடி நீளத்தில் வாய்ப் பகுதி இருக்கிறது. அப்பகுதிக்கு மதகுக் கதவுகளும் இருக்கின்றன. 4,00,000 கன அடி தண்ணீர் ஒவ்வொரு வினாடியிலும் பாய்வதற்கு அப்பகுதி வழி செய்கிறது. பாசனத்துக்கு தண்ணீர் கிடைப்பதற்காக அணையில் இரண்டு வரிசைக் 'கண்வாய்கள்' இருக்கும். ஒவ்வொரு வரிசையிலும் 10 கண்கள் இருக்கும். ஒவ்வொரு கண்வழியாகவும் வினாடிக்கு 1,06,000 கன அடி தண்ணீர் பாயும்.

இந்த அணை 74 இலட்சம் ஏகர் அடி தண்ணீரைத் தேக்கி வைக்கும். அதில் 57 இலட்சம் ஏகர் அடி தண்ணீர் நிலையாக இருக்கும். அத்தேக்கத்தின் ஏரி 56 மைல் நீளம் பரந்திருக்கும். சுமார் 38,000 ஏகர் பரப்புக்கு அது பரவி நிற்கும்.

நங்கல் அணை

பக்ரா மலை இடையிலிருந்து 8 மைலுக்கு அப்பால் நங்கல் அணை இருக்கிறது. அதன் உயரம் 95 அடி; நீளம் 1000 அடி; வினாடிக்கு 3,50,000 கன அடி தண்ணீர் அதன் மூலம் பாயும். அந்த அணை 30 அடி நீளமுள்ள 26 பகுதிகளாகக் கட்டப்பட்டிருக்கின்றது; இரு பகுதிகளுக்கிடையே 7 அடி அகலமுள்ள 'பியர்'கள் கட்டப்பட்டுள்ளன. கூழாங்கற்கள் உள்ளே நுழையாமல் தடுப்பதற்காக விசேட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; தண்ணீர் மட்டத்துக்குக் கீழே நின்று கண்காணிப்பதற்கான மேடைகளும் இருக்கின்றன.

பக்ரா கால்வாய்த் திட்டத்தில், முக்கியக் கால்வாய் சுமார் 700 மைல் நீளமுள்ளது; 4000 மைல் நீளமுள்ள கால்வாய்க் கிளைகளும் பிரிவுகளும் இருக்கின்றன. 238 மைல் நீளமுள்ள பக்ரா கால்வாய்தான் மிகவும் நீளமான ஒரே கால்வாய். அது முழுக்கத் தள வரிசையுள்ளது. உலகத்திலேயே முற்றிலும் தள வரிசையுள்ள மிக நீளமான கால்வாய் அதுதான்.

நங்கல் ஹைடெல் கால்வாய்

நங்கல் ஹைடெல் கால்வாய் நங்கல் அணையிலிருந்து ஆரம்பித்து 40 மைல் தூரம் செல்கிறது. அந்த முழு நீளத்துக்கும் தள வரிசை செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கால்வாய் பல காட்டாறுகளையும், பாதான மலை இடைகளையும் கடந்து செல்லுகிறது. அவை சந்திக்கும் 18 இடங்களில் வடிகால் ஏற்பாடுகள் செய்யவேண்டியிருந்தது.

பக்ரா கால்வாய் திட்டம் பூர்த்தியானபின் சுமார் 60 இலட்சம் ஏகர் நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கும்; அதில் 32 இலட்சம் ஏகர் நிலம் பஞ்சாப், பெப்சு, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருக்கிறது; ஆண்டுதோறும் பாசன வசதியுடன் அதில் சாகுபடி நடக்கும். இதனால் 10 இலட்சம் டன் அதிகப்படியான தானியம் விளையும். 8,00,000 பேல் நீள இழைப் பஞ்சும், 5,00,000 டன் கரும்பும், 15 இலட்சம் டன் தீவனப் பொருள்களும் விளையும்.

மின்சார நிலையங்கள்

இத்திட்டப்படி ஏற்படுகிற மின்சார நிலையங்களின் உற்பத்தி சக்தி 10 இலட்சம் கிலோ வாட். தற்போதைய மதிப்பீட்டின்படி பக்ரா மின்சார நிலையங்களில் 90,000 கிலோ வாட் வீதம் உற்பத்தி செய்கிற எட்டு இயந்திரங்கள் இருக்கும்; அவசரத் தேவை ஏற்பட்டால் உதவுவதற்காக உபரி இயந்திரம் ஒன்றும் இருக்கும். கங்குவால், கோட்லா ஆகிய இடங்களில் நிறுவப்படுகிற நங்கல் மின்சார நிலையங்களில் 21,000 கிலோ வாட் சக்தியுள்ள மும்மூன்று இயந்திரங்கள் இருக்கும். அதாவது மொத்த சக்தி 1,44,000 கிலோ வாட். பக்ரா - நங்கல் திட்டத்தின் மின்சார நிலையங்களின் உச்ச உபயோக மொத்த உற்பத்தி சக்தி 3,65,000 கிலோவாட்.

முதன் முதலாக, அங்கு வேலைகளுக்காக வந்தத் தொழிலாளர்களுக்கென எல்லா வசதிகளும் கொண்ட குடியிருப்புப் பகுதிகள் கட்டப்பட்டன.

இரயில், சாலைப் போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்த வேண்டியதும் அவசியமாக இருந்தது. அம்பாலாவிலிருந்து நங்கலுக்கும், பக்ராவிலிருந்து நங்கலுக்கும் இரயில் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நங்கல் - ரூப்பர், நங்கல் - பக்ரா 'தார்' சாலைகள் போடப்பட்டிருக்கின்றன.

பக்ராவில் மலை இடை வழியாகப் பாயும் நதித் தண்ணீரை வேறிடத்துக்குத் திருப்பிவிட வழியில்லாததால் இருபுற மலைகளிலும், 50 அடி அகலமும், அரை மைல் நீளமும் உள்ள இரு சுரங்கங்கள் குடையப்பட்டு, அவை வழியாகத் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதற்கு ரூ. - 3·63 கோடி செலவிடப்பட்டது.

இந்த அணைக்கு, ஆற்று மட்டத்துக்கு 180 அடி ஆழத்தில் அஸ்திவாரம் தோண்டப்பட வேண்டியதாயிருந்தது. இருபுற மலைகளிலும் மண் படையைச் சுரண்டிப் பாறை முகம் தெரியும்படி செய்வதற்காக, 20 கோடி கன அடி மண் வெட்டப்பட்டிருக்கிறது; இந்த வேலை முடிய 28 மாதங்கள் பிடித்தன.

அந்த அணைக்கட்டுத் திட்ட வேலையின் அளவையும், அதை விரைவாக நிறைவேற்ற வேண்டியிருப்பதன் அவசியத்தையும் கருதி இந்த வேலைக்கு முடிந்த வரையிலும் இயந்திர சாதன வழிகளையே உபயோகப்படுத்த முடிவு செய்யப்பட்டது. காங்கிரீட் வேலைக்கு முழுக்க முழுக்க இயந்திர சாதனங்களே உபயோகிக்கப்படுகின்றன. மணலும், சரல் கல்லும் 'கான்வேயர் பெல்டுகள்' மூலம் ஒரு மணி நேரத்தில் 750 டன் வீதம் கொண்டுவரப்படுகின்றன.

சில முக்கிய விபரங்கள்

680 அடி உயரமுள்ள பக்ரா அணை உலகத்திலுள்ள 'பளு அழுத்த அணை' ரகத்தைச் சேர்ந்த ('ஸ்ட்ரெயிட் கிராவிட்டி டாம்') அணைகளிலேயே மிகப் பெரியது. இதனைக் கட்டிமுடிப்பதற்கு உபயோகிக்கப்படவிருக்கும் மொத்த காங்கிரீட் (சுமார் 51 இலட்சம் கன கெஜம்) கல்கத்தாவிலிருந்து நியூயார்க் வரையில் 20 அடி அகலமும் 3 அடி கனமுமுள்ள பாதை ஒன்றை அமைப்பதற்குப் போதுமானதாயிருக்கும்!

8 லட்சம் டன் சிமெண்ட்!

பக்ரா அணைக்கான காங்கிரீட் தயாரிப்பில் உபயோகப்படுத்தப்படும் சிமெண்டின் மொத்த அளவு 8 லட்சம் டன்!

40,000 டன் உருக்கு!

பக்ரா அணைக்கு உபயோகப்படுத்தப்படவிருக்கும் 40,000 டன் உருக்கைக்கொண்டு 90 பவுண்டு தண்டவாளங்கள் செய்தால் 300 மைல் நீளமுள்ள இரயில் பாதை அமைப்பதற்குப் போதுமான தண்டவாளங்கள் கிடைக்கும்!

பக்ரா அணைக்கட்டு இடத்திற்கு 'கான்வேயர் பெல்ட்டுகள்' மணிக்கு 750 டன் வீதம் மணலையும் சரலையும் ஏற்றிச் செல்கின்றன.

தோண்டியெடுத்த மண்ணால் மலையே உருவாக்கலாம்!

துணை வேலைகளுக்கான அகழ்ந்தெடுப்பு உட்பட பக்ரா அணைக்கட்டு இடத்தில் 28 மாத காலத்தில் மொத்தம் 7½ இலட்சம் கன கெஜம் (19·6 கோடி கன அடி) மண் அகழ்ந்தெடுக்கப்பட்டது; அதாவது மாதம் ஒன்றுக்கு 2.64 இலட்சம் கன கெஜம் வீதம் வெட்டியெடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு தோண்டியெடுக்கப்பட்ட மண்ணைக்கொண்டு 700 அடி தளமும், சுமார் 1,500 அடி உயரமுமுள்ள மலையையே உருவாக்கிவிடலாம்!

பக்ரா அணைக்கட்டு இடத்திலுள்ள முக்கிய சுரங்கங்களைத் தவிர, மற்ற சில வேலைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள சுரங்கங்களின் மொத்த நீளம் மட்டும் சுமார் 2 மைல் இருக்குமாம்!

அமெரிக்கப் பத்திரிகையாளருக்கு ரஷ்யா பரிசுத் திட்டம்

அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் பரிசு ஒன்று அளிக்க தாங்கள் திட்டமிட்டிருப்பதாக அமெரிக்காவில் இப்போது சுற்றுப்பயணம் செய்து வரும் சோவியத் பத்திரிகையாளர் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

சோவியத் யூனியனில் ஆறு கிழமைகள் தங்கி எங்குவேண்டுமானாலும் சுற்றிப்பார்க்கும் சுதந்திரம் பெறுவதே அப்பரிசாக இருக்கும் என்றும் அந்தக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர். அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளிடையேயும் மேலும் மேலும் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கு அதிகமாகப் பணிபுரியும் ஒரு பத்திரிகையாளருக்கே அந்தப் பரிசு வழங்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனராம்.

இதே போல அமெரிக்காவும் ரஷ்யப் பத்திரிகையாளருக்கு இப்படி ஒரு பரிசு வழங்கத் திட்டமிட வேண்டும் என்றும் அவர்கள் யோசனை தெரிவித்தனராம்.

அமெரிக்க தேசிய பத்திரிகையாளர் சங்கத்தினர், இது குறித்து பரிசீலிப்பதாகத் தெரிவித்திருக்கின்றனராம்.

ஐ. நா.-வில் தென்னாப்பிரிக்க அலுவலகம் 'மூடுவிழா'

நியூயார்க், நவ. 15—

ஐ. நா. பொதுச் சபையின் இக்கூட்டத் தொடர் முழுமையும் அங்குள்ள தென்னாப்பிரிக்க நிரந்தரத் தூதுக் குழு அலுவலகத்தை மூடிவிட தென்னாப்பிரிக்க சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

தென் மேற்கு ஆப்பிரிக்க சார்பில் பூஜ்யர் மைக்கேல் ஸ்காட்டிற்கும் பேச அனுமதி தந்ததே இந்த 'மூடு விழா'விற்குக் காரணமாம்.

திருவொற்றியூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

5—11—55 மாலை 5 மணிக்கு, சன்னதித் தெருவில் நடக்கவிருந்த பொதுக் கூட்டம், மழையின் காரணமாக தோழர் ஜெகந்நாதன் தியேட்டரில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் ஏ. வி. ஆறுமுகம் தலைமை தாங்கினார். தோழர்கள் எஸ். மாசிலாமணி, டி. சண்முகம் எம். எல். ஏ., ஆர். எஸ். பாண்டியன், கே. ஏ. மதியழகன், கே. கே. நீலமேகம் ஆகியோர் இன்றைய அரசியல் நிலைமைகள் பற்றிப் பேசினர்.

ஃ ஃ ஃ

மாநில மாநாட்டுக்கு நிதி

பின்னர், திருவொற்றியூர் தி. மு. கிளைக் கழகச் சார்பில் ரூ. 100—4—0-ம், செனத் இந்தியன் கார்பானிக் கேஸ் பாக்டரி தொழிலாளர்கள் சார்பில் ரூ. 5-ம் மாநில மாநாட்டு நிதிக்கு அண்ணா அவர்களிடம் அளிக்கப்பட்டது. 'விம்கோ' தீக்குச்சித் தொழிலாளர் சார்பாக தோழர் வை. பார்த்தசாரதி அவர்களால் ரூ. 101-1-0ம், சிகரெட் பாக்டரி தொழிலாளர்கள் சார்பில் தோழர் நீனதயாளன் அவர்களால் ரூ. 44—2—0-ம் அண்ணா அவர்களிடம் தரப்பட்டது. அண்ணா அவர்கட்கு கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன. இறுதியில் அண்ணா அவர்கள் இரண்டாவது மாநில மாநாட்டு நிலைமைகளை விளக்கியும், ஆவடி மாநாட்டைப் போன்றல்லாது, பொதுமக்களுக்கான எல்லா வசதி செய்ய வேண்டியதை விளக்கியும், இன்றைய அரசியலாரின் போக்கைக் குறித்தும், எதிர்காலத்தில் கழகம் தேர்தலில் ஈடுபடுவதா இல்லையா என்பது பொது மக்கள் கரங்களில்தான் உள்ளது என்பதை எடுத்துக்காட்டியும் நீண்டதோர் அறிவுரையாற்றினார்.

இறுதியில் கிளைக் கழகச் செயலாளர், மாநாட்டு நிதித் திரட்டலில் முழு உழைப்பையும் தந்த நிதிக் குழுவினர்கள் அனைவருக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

கோவா விடுதலைக்கு......

இங்கிலாந்து மக்கள் சபை உறுப்பினர்கள் முயற்சி

★

லண்டன், நவ. 15 —

காலனிகளின் விடுதலைக்கான இயக்கத்துடன் கூட்டுச் சேர்ந்து கோவா விடுதலைக் குழு அமைப்பதென பென்னர் பிராக்வே என்பார் கூட்டிய மக்கள் சபை உறுப்பினர் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அந்தக் குழுவின் தலைவராக அந்தோனி வெட்ஜுவுட்பென் என்பாரும், செயலாளராக ஜியார்ஜ் கிராட்டாக் என்பாரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனராம். செயற் குழு உறுப்பினர்களாக மேலும் நான்கு மக்கள் சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தியாவில் உள்ள கோவா விடுதலை இயக்கத்தவருடன் இந்தக் குழு தொடர்பு கொள்ளவேண்டும் என்றும், மக்கள் சபை, மற்றும் பொது நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் போதெல்லாம் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாம்.

அகில உலக சோஷலிஸ்டு இளைஞர் சங்கத்தின் தலைவரான நாத்பாய் என்பார் கூட்டத்தில் உரை நிகழ்த்தியிருக்கிறார். இவர் இந்தியாவில் உள்ள கோவா விடுதலை இயக்கத் தலைவர்களுள் ஒருவர்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் வத்தலக்குண்டுவருகை

21—11—55 மாலை 6 மணிக்கு

வத்தலக்குண்டு — ரேடியோ மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தி.மு.கழக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழி வாற்றுவார்.

கழகக் கூட்டம்

அயோத்தியாபட்டணம்

ரேடியோ மைதானத்தில்

19-11-55 மாலை 6½ மணிக்கு

தலைவர் : கே. கருப்பண்ணன்

பேசுவோர்:

காஞ்சி-கல்யாணசுந்தரம்

சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்

பக்தூனிஸ்தான்.......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைத்து விட்டார்கள். இம்முடிவை ஆப்கனிஸ்தானம் ஏற்கவில்லை என்பதை இந்தியா விடுதலை பெற்ற சமயத்தில் தெரிவித்திருக்கிறோம்,"

என்றும், தாவூத்கான் குறிப்பிட்டிருக்கிறார்.

"அமெரிக்க உதவி குடியரசுத் தலைவர் நிக்சன், அமெரிக்க வெளிவிவகார நிபுணர் ஜார்ஜ் மெக்கி ஆகியவர்களிடம் பக்தூன் கோரிக்கையைத் தெரிவித்தோம்;

"பாகிஸ்தான் சர்க்கார் அப்பகுதிக்கு சுயநிர்ணய உரிமை தராமல், மலைசாதியினர் உள்பட பக்தூன் பகுதி முழுவதையும் மேற்கு பாகிஸ்தானத்தில் சேர்ப்பது கண்டு அவர்கள் இருவரும் ஆச்சரியம் தெரிவித்தார்கள்; எனவே, இச் செய்கையை ஆட்சேபித்து கராச்சியில் உள்ள நமது தூதுவரைத் திரும்பப் பெற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது."

என்றும், அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மன்னர் ஜகிர் ஷா பேசுகையில், "பக்தூனிஸ்தான் பற்றி பாகிஸ்தான் கொண்டுள்ள கொள்கை காரணமாக ஆப்கானிஸ்தான் ஒரு நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. எனவே, அயல் நாட்டு விவகாரங்களிலும் நாடும் சர்க்காரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணாதுரை சேலம் வருகை

★

கட்டிடத் திறப்பு விழா

20-11-55 காலை 8 மணிக்கு, சேலம் — அம்மாப்பேட்டை, மெயின் ரோடில், 18-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தை, தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு தலைமையில் தோழர் சி.என். அண்ணாதுரை திறந்து வைப்பார்.

சிறப்புச் சொற்பொழிவு

அன்று காலை 10 மணிக்கு, சேலம்-சித்தேஸ்வராவில், தோழர் சுடர்மணி தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை பேசுவார்.

பொதுக்கூட்டம்

அன்று மாலை 6-30 மணிக்கு, சேலம்-விக்டோரியா மார்க்கட்டில், தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை, மற்றும் பலர் பேசுவர்.

சென்னை மாநில எய்டட் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்—மானேஜர்கள், மானேஜர்கள் சங்க மாநில மாநாடு

★

19—11—55 காலை 10-30 மணிக்கு, வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர் நகர மன்றத்தில், மேற்படி மாநாடு, திரு. டாக்டர் பி வரதராசுலு எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும். திரு. எஸ் பஞ்சாட்சரம் எம் எல் ஏ., அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைப்பார். இராவ்பகதூர் சி. துரைசாமிஐயா, வி கே. கண்ணன் எம் எல்.ஏ., பி. வீரராகவன், எஸ். கே பழனி ஐயா ஆகியோரும், மற்றும் பல எம் எல் ஏ.,-க்களும் பேசுவர்.

வரவேற்புக் குழு உறுப்பினர்களும், பிரதிநிதிகளும் 18-11-55 மாலை 6 மணிக்குள் வேலூர் வர வேண்டுமென்றும், மாநாட்டில் கொண்டுவர இருக்கும் தீர்மானங்களை 17—11—55-க்குள் வ. கு. செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

****

திராவிட மாணவ முன்னேற்றக்கழக 2-வது மாநில மாநாடு

★

19-11-55 சனி காலை 8-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

நடைபெறும்

★

தலைவர் : **கே. ஏ. மதியழகன்**

திறப்பாளர் : **இரா. நெடுஞ்செழியன்**

பேசுவோர் : **சி. என். அண்ணாதுரை**

என். வி. நடராசன்

ஆகியோரும், மற்றும் திராவிட மாணவ மணிகளும்.

இசைச் செல்வி ஜி. கஸ்தூரியின் இன்னிசையுடன் துவங்கும்

நன்கொடை : ரூ. 1, அணா 8

உ. பில்லப்பன் எல். லெனின், மாறன் டி.கே.பொன்னுவேலு
நா. நி. தயாளன் பொருளாளர் வரவேற்புக் குழுத்
செயலாளர்கள் தலைவர்

18—11—55 வெள்ளி காலை 8 மணி முதல், இராயபுரம் 'அறிவகத்'தில் நன்கொடைச் சீட்டுகள் கிடைக்கும்

****

எஸ். ஆர். எம். யூ. பொன்மலை கிளை உறுப்பினர்கட்டு

ம. ச. தலைவர் இராகவானந்தம் வேண்டுகோள்

தோழர்களே!

பொன்மலை கிளைக்கு ஊறு தேடும் வகையில் நடந்துவிட்டேன் என்றும், துரோகம் செய்துவிட்டேன் என்றும் 'விடுதலை'யில் கிளை நிர்வாகிகள் பெயரில்வெளியிடப்பட்டுள்ள அறிக்கையைப் பார்த்தேன். இந்த அறிக்கையையும், ம. ச. நிர்வாகிகள் பெயரில் வெளிவந்த அறிக்கையையும் தயாரித்துத் தந்த தோழர் ஆளவந்தார் இத்துடன் நிறுத்தவில்லை. என் மீது நம்பிக்கையில்லை என்று எழுதி அனுப்பி, மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்களைக் கையெழுத்துப் போட்டு அனுப்பச்சொல்லி பல கடிதங்களும் அனுப்பியுள்ளார். தான் டி. டி. எஸ். அலுவலகத்தில் மாற்றல் போடும் அதிகாரத்தில் உள்ளபடியால் 'அங்கு மாற்றுகிறேன் இங்கு மாற்றுகிறேன்' என்று வாக்குக் கொடுத்து ஆதரவு தேடுகிறார். லீவு எடுத்துக் கொண்டு இந்த வேலையாய் சுற்றுகிறார். தொழிலாளர்கள் இந்தப் பசப்பு வார்த்தைக்கு ஏமாறமாட்டார்கள் என்பது 21 11—55 அன்று விளங்கும். இவரிடம் நீங்கள் மிக முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இவர் 'எம்ப்ளாயிஸ் அசோசியேஷனி'லிருந்து 5 ஆண்டுகளுக்கு வெளியேற்றப்பட்டவர்; 'லேபர் யூனியனி'லிருந்து தோழர் நம்பியார் அவர்களால் வெளியே தள்ளப்பட்டவர்; இப்போது எஸ். ஆர். எம். யூ-வின் ஒற்றுமையைச் சீர்குலைக்கிறார். கழகம் இரண்டாகப் பிரிவதற்குக் கூடமிக உதவியவர்.

நான் என்ன துரோகம் செய்தேன்?—ஊறு தேடும் வகையில் நான் செய்த செயல் என்ன என்று விளக்கி எழுதினால் நன்றியுள்ளவனாவேன். 'சதி கண்டு பிடிக்கப்பட்டது' என்று சொல்லப்பட்டுள்ளதே—என்ன சதி? எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது? ஆதாரம் என்ன?—இவைகளையும் வெளியிடும்படி வேண்டிக் கொள்கிறேன். 6,000 தொழிலாளர்களுக்கும் மேல் பணி செய்யும் பொன்மலையில் ஆரம்பத்தில் எஸ். ஆர். எம். யூ.-வில் 500 பேருக்கு மேல் சேர்ந்தார்களே — பின்னர் ஏன் 70, 127 என்று உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தது என்று எண்ணிப் பாருங்கள்.

அலுவலக வாடகைப் பாக்கி ரூ. 200-க்கு மேல் இருக்கிறது; இந்த வகையில் யூனியன் நடக்கிறது. உங்கள் வலுவை அதிகப்படுத்த—எண்ணிக்கையை அதிகப்படுத்த நான் முயற்சி செய்தால், அது, 'துரோகச் செயல்' என்று சொல்லப்படுகிறது. 'எண்ணிக்கை அதிகம் தேவையில்லை; 10 பேர் இருந்தால் போதும்' என்று சொல்லப்படுகிறது. 10 பேர் இருந்தால், ஐவர் கொண்ட பூப்பந்தாட்டப் போட்டி விளையாட்டு விளையாடலாமே ஒழிய தொழிற் சங்கம் நடத்த முடியாது.

1946-ல் போராட்டக் காலம் முதல் உள்ளவன்—பல கஷ்ட நஷ்டங்களை ஏற்றவன்—ஏற்கத் தயாராக உள்ளவன் என்ற வகையில் சொல்கிறேன்—இந்தத் 'திருச்சிக் குழு'வை நம்பி ஏமாந்து போகாதீர்கள். பொன்மலை கிளை துணைச் செயலாளர் தோழர் எஸ். ஏ. துரைராஜ் அவர்களை 1953-லேயே விலக்கவேண்டுமென்றார்கள். என் ஆதரவால்தான் அவர் இருக்க முடிந்தது. திரு. ஜோ அவர்கள் இதை அறிவார்கள். 'பொன்மலை கிளை நிர்வாகிகள் யூனியன் வளர்ச்சிக்குப் பாடுபடுவதில்லை—கழக வளர்ச்சியைத் தான் கருதுகிறார்கள்'—என்று குற்றம் சாட்டி திரு. துரைராஜ் அவர்கள் எழுதிய கடிதம் என்னிடம் உள்ளது. அவர் அனுமதி கொடுத்தால் அதை நான் வெளியிடுகிறேன்.

4—12—55 அன்று ம. நி. குழுக் கூட்டம் நடந்த பின் 10 கிளைகள் ஆரம்பிக்க இருக்கிறேன். சனவரி மாதத்திலிருந்து 'முரசு'ம் வெளிவர ஏற்பாடாகிவிட்டது. பல உதவி நிதிகள் ஏற்படுத்தவும், புதிதாக அமையப் போகும் அகில இந்திய இரயில்வே சம்மேளனத்தில் நம் யூனியனை இணைக்கவும் ஏற்பாடாகி வருகிறது. இந்த நடவடிக்கை எல்லாம் உங்கள் கையை மேலும் வலுப்படுத்தும். பொன்மலைக்கு மாற்றலாகி வர வேண்டிய நான், உங்களுக்கு ஆதரவு லயனிலும், லயனில் உள்ளவர்கட்கு ஆதரவு உங்களிடத்திலும் தேடவே விழுப்புரத்திற்கு—அதுவும் உங்கள் யோசனையின் பேரில் மாற்றிக் கொண்டுவந்தேன். நம் யூனியனுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. நன்றாகச் சிந்தித்து, எந்தக் காரியமும் செய்யும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

அன்பன்

(ஒப்பம்) சி. இராகவானந்தம்

★

கிளைகளின் கண்டனங்கள்

சேலம்

16—11—55ல், எஸ் ஆர். எம் யூ. சேலம் கிளையின் கமிட்டிக் கூட்டம், தோழர் தங்கராசு தலைமையில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :—

"4—12—55ல், நிர்வாகக் குழுக் கூட்டம் விழுப்புரத்தில் நடத்த மத்திய சங்கத் தலைவர் திரு. எஸ். இராகவானந்தம் எல்லா கிளைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கும்பொழுது, மத்திய சங்கத் தலைவர், பொதுச் செயலாளர் அனுமதியின்றி 21—11—55ல், மண்டபத்தில் கூடவிருக்கும் நிர்வாகக் குழுக் கூட்டத்தை நிராகரிக்கிறோம்; அது அதிகார பூர்வமானது அல்லாததால் அதில் மேற்கொள்ளப்படும் முடிவு எங்கள் கிளையைக் கட்டுப்படுத்தாது.

"நிர்வாகக் குழுக் கூட்டத்தின் பொழுது மத்திய சங்கத் தலைவர், யூனியன் கொள்கைக்கு விரோதமாக நடந்து கொண்டதைக் காரண காரியங்களோடு விளக்கி, அவர் மீது நம்பிக்கையின்மையை வலியுறுத்தாது திரு. சச்சிதானந்தமும் சில மத்திய சங்க நிர்வாகிகளும் தான்தோன்றித் தனமாகப் பத்திரிகைகளில் அறிக்கை விட்டுவருவது, யூனியன் வளர்ச்சிக்கு பாதகமாக இருப்பதால், அதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

"21—11—55ல் மண்டபத்தில் நடக்க இருக்கும் நிர்வாகக் குழு கூட்டத்தில் சேலம் கிளைத் தலைவர் தோழர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கலந்து கொள்ளக் கூடாது எனக் கேட்டுக்கொள்ளுகிறது. மீறி கலந்துகொண்டால், தோழர் பாலசுப்பிரமணியம் தன்னிச்சையாக ஒரு சாதாரண உறுப்பினர் என்ற முறையில் கலந்து கொள்ளுகிறாரே தவிர, கிளைத் தலைவர் என்ற முறையில் அல்ல என்று கருதுகிறது."

செங்கல்பட்டு

16—11—55 மாலை 3 மணிக்கு நடைபெற்ற மேற்படி கிளையின் செயற் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் விவரம் :—

"4—12—55-ல் விழுப்புரத்தில் மத்திய சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற இருக்கும் போது, கூட்டுப் பொதுச் செயலாளர் தோழர் சச்சிதானந்தம் அவர்கள், குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்குடன் அதற்கு முன்னதாகவே 21—11—55-ல் மண்டபம் இரயில் நிலையத்தில் மத்திய சங்கக் குழுக் கூட்டம் கூட்டுவதாக விடுத்துள்ள அறிக்கை முறையல்ல என்று கருதுவதுடன், 23—10—55-ல் நடைபெற்ற கிளைச் சங்கக் கூட்டத்தில், கூட்டுப் பொதுச் செயலாளர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறபோது, ஒழுக்கத்திற்கும், பண்புக்கும் மாறாக அவரே மத்தியக் குழுவைக் கூட்டுவதை வன்மையாகக் கண்டிக்கிறது.

"21—11—55-ல் மண்டபத்தில் நடைபெற இருக்கும் கூட்டத்தில் கலந்துகொள்ளாமல், 4—12—55-ல் விழுப்புரத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்வதென முடிவு செய்யப்படுகிறது."

எம். எல். ஏ. கொலை எதிரொலி!

46 பேர் கைது

பாராபங்கி, நவ. 15—

உத்தரப் பிரதேச சட்டசபை உறுப்பினர் அவத் சரண் வர்மா, மற்றும் ஊழியர் சியாராம் என்பவர்கள் அண்மையில் பொதுக் கூட்டம் ஒன்றில் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக 46 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிகிறது.

36 பேர்களைப் போலீசாரே கைது செய்தனர் என்றும், 10 பேர் தாங்களாகவே சரண் அடைந்தனர் என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.